உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்வெண்பா.

(திருக்குறளுத்தரார்த்தத்துடன்)

இது

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்,

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கர்,

பண்டிதரத்தினம்,

புழலை - திருநாவுக்கரசுமுதலியாரால்

பார்வையிடப்பட்டு,

இவர்தம் மாணாக்கர்,

புழலை - மாணிக்கவேலுமுதலியாரால்

சென்னை,

பண்டிதமித்ர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

பராபவஹு - தனுர்ரவி.

1906.

உ

சிவமயம்.

சாத்துகவி.

இது

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம்

ஸ்ரீமத் - சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகள்

அருளிச்செய்தது.

வெண்பா.

திருத்தொண்டர் வெண்பா திசையனைத்து மோங்கத்
திருத்தியச் சிட்டான் றெளிவாய்—பொருத்தமுற
நற்றமிழ்தொல் காப்பியங்க ளெண்ணு நயமனைத்துங்
கற்றதிரு நாவுக் கரசு.

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்வெண்பா.

(திருக்குறளுத்தரார்த்தத்துடன்)

விநாயகர் - காப்பு.

தூண்டா விளக்கருள்செய் தொண்டத் தொகையினம்பி
யாண்டாரந் தாதிமுறை யன்பானோர்க்—கீண்டியமெய்
வள்ளுவர்நூல் வெண்பா வகுததுரைப்ப நாரையூர்ப்
பிள்ளையா ரைத்தொழுது பின்.

அவையடக்கம்.

மைவைத்த கண்டர் மறைவாக்கி னாற்புகழ்ந்த
சைவத் தலைவரன்பு சாற்றுதல்யான்—கைவைத்
தரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

உபகாரம்.

தூயதிருத் தொண்டத் தொகைதந்து சுந்தரர்தா
மாயிருளா லத்தோரை வாழ்வித்தா—ராயதேவன்
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

நூல்.

தில்லைவாழந்தணர்.

பூவா யிரம்பேர் புகழ்கூத்த ரைத்தில்லை
மூவா யிரம்பேர் முதலெனக்கொண்—டோவா
ரகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

திருநீலகண்டநாயனர்.

ஆலகண்ட ராணைகொண்டில் லாளெதிர்செல் லாதுதிரு
நீலகண்ட ரைம்பொறிமா ணீக்கினர்—மேலா
யுரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. (உ)

இயற்பகைநாயனர்.

மயற்பகையுள் ளூவப்ப மாதவர்க்கில் லாளை
யியற்பகையி கழ்ந்தெள்ளா தீந்தார்—செயர்பா
லிகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து, (ங)

இளையான்குடிமாறநாயனர்.

உய்வித் தரனடியார்க் கோரிருளிற் போய்மாறன்
செய்வித்தும் வாரியன்னஞ் செய்தாரே—மெய்வருந்தி
வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். (ச)

மெய்ப்பொருணயனர்.

பொய்ப்பொருண்மாற் றுன்புரிந்த பொய்த்தவவேடம்
பொருளாய், மெய்ப்பொருளார் கண்ட விதந்தானே—மெய்
ப்பொரு, ளெப்பொரு ளெத்தன்மைத் தாயினுமப்பொருண்,
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (ரு)

விறன்மிண்டநாயனார்.

அறன்மண்டு சுந்தரனை யாரூ ரரனை
விறன்மிண்டர் தாமே வெகுண்டார்—மறமன்
றுறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும். (௬)

அமர்நீதிநாயனார்.

நிரம்புபொருள் சேயொடமர் நீதிமனை யாளோ
டரன்கோ வணத்தட் டகனே—யிருந்தார்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. (௭)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அளந்தருள்செம் பொன்மணிமுத் தாற்றிலிட்டா ரூரர்
குளந்தனிலே கண்டெடுத்துக் கொண்டா—ருளைந்து
பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. (௮)

எறிபத்தநாயனார்.

பத்தர்பூ சூழி பறித்தகரி பாகரைக்கொன்
றித்தலவேந் தஞ்ச வெறிபத்தர்—கைத்தார்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. (௯)

ஏனாதிநாயனார்.

தானைக வெல்லாதான் றன்னுதல்வி பூதியைக்கண்
டேனாதி நாத ரிகலிழந்தா—ரானுதல்
சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல். (௧௦)

கண்ணப்பநாயனார்.

புண்ணப்பர் கண்ணிலென்று புன்கணுறப் பீர்ந்தப்பிக்
கண்ணப்ப ரன்புறுப்பிற் கைசெய்தார்—வண்ணப்
புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. (கக)

குங்கிலியக்கலயநாயனார்.

தலையன்பி னல்வளைந்தார் தம்மைநிமிர்த் திட்டார்
கலையன்பின் காணிடுக்கண் காணார்—வலைவை
மடுத்தவா யெல்லாம் பகடன்றோ னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து. (கஉ)

மானக்கஞ்சாறநாயனார்.

பஞ்சவடிக் கென்றுசிவ பத்தர்க் குவப்பமண
வஞ்சுவைதமென் கூந்தலரிந் தன்றீந்தார்—கஞ்சாற
ரீத்துவக்கு மின்ப மறியார்கொ ளுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (கங)

அரிவாட்டநாயனார்.

போயகமர் மாவடுவும் புண்ணியர்வா யிற்கொளப்பெய்
தாயரகத் தூறுவடுத் தாங்கொண்டார்—வீயாரோ
சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. (கச)

ஆனாயநாயனார்.

ஆனாயர் வேயிசையி லஞ்செழுத்தை யஞ்செவிச்செந்
தேனா யரனாற்குச் செய்தனரே—கானிற்
பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல். (கரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆதியிலா ரூரர்க் கமுதாக வேபரவை
வீதியெல்லா நெல்லாய் விளைந்ததே—நீதியா
லில்லதெ னில்லவண் மாண்பாணு லுள்ளதெ
னில்லவண் மாணுக் கடை. (கசு)

மூர்த்திநாயனார்.

சேர்த்திமுழங் கையெலும்புந் தேய்வுறவே சந்தனமா
மூர்த்திமது ரேசருக்கு முன்பரைத்தார்—பார்த்திரோ
வன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. (கஎ)

முருகநாயனார்.

மட்டார்தார் கண்ணி வகைசிவபூ சைக்கொருநாள்
முட்டாது செய்தார் முருகனார்—விட்டாரோ
வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (கஅ)

உருத்திரபசுபதிநாயனார்.

உருத்திரமே சொல்லி யுதகத்து ளேநின்
றுருத்ர பசுபதியா ருற்றார்—திருத்தா
டவஞ் செய்தார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ் செய்வா ராசையுட் பட்டு. (கசு)

திருநாளைப்போவார்நாயனார்.

மூவா யிரமறையோர் மொய்ப்பத் திருநாளைப்
போவார் சிதம்பரத்துட் போயடைந்தா—ரோவாய்
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (உ0)

திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

தொண்டர் குறிப்பறிந்த தொண்டர் திருக்குறிப்புத்
தொண்டரைத்தங் கந்தைதந்து சோதியராட்—கொண்டார்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். (உக)

சண்டேசநாயனார்.

அறஞ்செயத் தாதைதா ளற்றிடச்சண் டேசர்
மறஞ்செயலே புண்ணியமாய் வாழ்ந்தார்—திறந்தெரியி
னல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. (உஉ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஓரா பரவைக் குமாபதியைத் தூதாக்கித்
தீராப் புலவியையுந் தீர்த்தாரே—யாரூர
ருப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல். (உங)

திருநாவுக்கரசுசுவாமிகள்.

தரைசேர் சமணீக்கிச் சைவஞ்சேர் நாவுக்
கரசர் வயிற்றுவலி யற்றா—ருறைசேர்ந்த
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (உச)

நீற்றறைநஞ் சானைகட னேருய்த்தா ரப்பருக்கு
மாற்றமணர் பின்னிருந்து வாழ்ந்தாரோ—வாற்றரிய
நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (உரு)

மருணீக்கி யார்தன்ம சேனருமாய் நாவுக்
கரசரப்ப ராகியின்ப மானா—ரருளா
விருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. (உசு)

விண்களிப்பர் காணா வியன்கயிலை வாழ்வையப்பர்
கண்களிப்ப வையாற்றிற் கண்டுவந்தா—ரெண்களிப்பக்
கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (உஎ)

மாமணிப்பொன் மாதரெதிர் வந்துறினும் பற்றாமற்
றாமரன்பா லன்பரசர் தாழ்ந்தாரோ—வாமெனவே
பற்றற்ற கண்ணே பிறப்பழுக்கு மற்று
நிலையாமை காணப் படும். (உஅ)

குலச்சிறைநாயனார்.

நலச்சிறைநீர் வேணியார் நல்லடியா ராகுங்
குலச்சிறையார் தாம்பணிதல் குன்றா—ரிலக்கிழா
ரெல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (உகூ)

பெருமிழலைக் குறும்பநாயனார்.

நாவலர்கோ மான்கயிலை நாளைப்போ மென்றுமுன்போய்
மேவிமிழ லைக்குறும்பர் வீற்றிருந்தா—யாவருக்கு
மின்னா தினனில்லார் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. (௩0)

காரைக்காலம்மையார்.

என்புருவா லம்மையெள்ள வீசரெமக் கம்மையென்னு
மன்புருவாள் காரைக்கா லம்மைகாண்—முன்பே
யுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து. (௫௧)

அப்பூதிநாயனார்.

அரசினையப் பூதி யடிகளறி வாரோ
வுரைசெயுணர் வானட் புற்றார்—மருவிப்
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சித்தா
னட்பாங் கிழமை தரும். (௫௨)

திருநீலநக்கநாயனார்.

நலங்கொடிரு நீலநக்கர் நாதர்மே லில்லாள்
சிலம்பிவிழ வாய்மருந்து செய்தாள்—சலங்கொளுமுன்
னோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (௫௩)

நமிநந்தியடிகணாயனார்.

நக்கமணர் வெள்க நமிநந்தி யாரூர்க்கு
மிக்கபுன லாலே விளக்கெரித்தார்—தக்கமனத்
தெண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (௫௪)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆரூறு காட்டாரை யாறணையா லாறுபெரு
காறூறு காட்டவடைந் தாரூரர்—பேறுணர்
வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். (௫௫)

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்.

வால வயதில் வளர்புகலிப் பிள்ளையார்
போல விசயம் புரிந்தவரார்—ஞாலமிசை
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (டுசு)

பண்ணார் பசுந்தமிழ்ச்சம் பந்தரெதிர் வந்தமண
ரெண்ணா யிரங்கழுவி லேறினா—ரொண்ணாது
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (டுஎ)

முத்தமிழ்ஞா னத்தலைவர் முன்னம் பகைசாரிப்
புத்தனெதிர் நின்றிடியிற் பொன்றினா—னித்திறமென்
கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல். (டுஅ)

ஏறியவோ டக்கோ லிசைஞானச் செந்தமிழா
லாறுகடந் தார்தோணி யார்மகனார்—வீறடங்கா
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு. (டுகூ)

கணவனெனக் காதலியைக் காழியர்கைப் பற்றி
மணவரையி சன்கழலாய் வாழ்ந்தார்—குணமே
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (சு0)

ஏயர்கோன்கலிக்காமநாயனார்.

ஈசனையாள் வாராம்வந் தென்னையாள் வாரென்று
காசினியில் மாண்டார் கலிக்காமர்—பேசின்
மருந்தோமற் றாமேனும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. (சக)

திருமூலநாயனார்.

பரகாயஞ் சேர்ந்தார் பசுக்களா லாட்சி
மருவாமை மாதவமே வாழ்ந்தார்—திருமூல
ரூழையு முப்பக்கங் காண்ப ருலேவின்றித்
தாழா துனுற்று பவர், (சஉ)

தண்டியடிகணாயனார்

அந்தகனென் றேசு மமணர்தங் கண்ணழிய
தந்தமொழி சாதித்தார் தண்டியார்—முந்தமொழி
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். (சங)

மூர்க்கநாயனார்.

உருளாய முமபொன் னுதவுதல்மூர்க் கற்கே
பொருளாய மற்றவர்க்கே போக்கு—மருளா
மறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (சச)

சோமாசிமாறநாயனார்.

சோமாசி மாறனார் சுந்தரரால் யாகமினித்
தாமா றரனையழைப் பித்தா—ராமாம்
பொதுநோக்கான வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர். (சரு)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

பொருட்டுறையன் பாட்டேநற் பூசையென்றூ ரூரற்
கருட்டுறையா ரன்புசெய்வா ராஞர்—மறுட்டோ
செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். (சசு)

சாக்கியநாயனார்.

அங்கசன்பூ வெல்லா மடுகணையே சாக்கியர்கைச்
செங்கலெல்லாஞ் சங்கரற்குத் தேமலரே—செங்கேழ்
கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். (சஎ)

சிறப்புலிநாயனார்.

எய்தமகிழ்ந் தின்சொலுரைத் தீசனடி யார்க்கிதமே
செய்தனஞ்செய் தாரே சிறப்புலியார்—வெய்யதுரூர்
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (சஅ)

சிறுத்தொண்டநாயனார்.

காய்க்கறிவே றென்றுதொடாக் கள்ள வயிரவர்க்கோர்
சேய்க்கறிசெய் திட்டார் சிறுத்தொண்டர்—வாய்க்கினிதா
யின்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. (சகூ)

கழறிற்றறிவார்நாயனார்.

நெறிவார் சடையரைப்போ னீணிலத்தோர் செய்கை
யறிவார் கழறிற் றறிவா—ரறிவாரா
ரெல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். (ருo)

கணநாதநாயனார்.

நாட்டிலடி யாரை யெல்லா நாதன் பணிவிடையே
காட்டிவாழ் வித்தார் கணநாதர்—வேட்டவர் தாஞ்
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. (ருக)

கூற்றுவநாயனார்.

ஆற்றறிதா மீச னடிமுடியா கப்புனைந்து
போற்றி மனக்கவலை போக்கினார்—கூற்றர்
தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. (ருஎ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆரூர ரீசரைத்தூ தாக்கியநாட் கூன்குருடு
தாரோடு தாய்பூலந் தாங்கவினை—தீர்வார
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (ருஅ)

பொய்யடிமையில்லாதபுலவர்.

மதுரையிலே மேழ்புலவர் வல்லசிவன் பாத
மதுபொருளாப் பாவியற்றி னாரே—புதுமையோ
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழா அ ரெனின். (ருகூ)

புகழ்ச்சோழநாயனார்.

தங்களத்தில் வீழ்ந்த சடைத்தலைகண் டஞ்சியஞ்சிப்
பொங்கழற்குள் வீழ்ந்தார் புகழ்ச்சோழர்—தங்கருமந்
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். (ருரு)

நரசிங்கமுனையரையநாயனர்.

மூரிநர சிங்க முனையரையர் மாதவருட்
சீரியதூர்த் தற்கிரட்டி செய்தாராம்—பூரியினை
யற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (ருசு)

அதிபத்தநாயனர்.

மீனர்செல் வங்கெடினு மீன்வலையிற் சிக்கொருமீ
னனு மீந்தா ரதிபத்த—ராஞ
திடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். (ருஎ)

கலிக்கம்பநாயனர்.

மெய்யடியா ராயுமடி மேற்பெயுநீர் பிந்தவாள்
கையடியுங் கூர்ந்தார் கலிக்கம்பர்—மையலைக்கொண்
டில்லானை யஞ்சுவா னஞ்சும்மற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். (ருஅ)

கலியநாயனர்.

எள்ளாவி ளக்கரன்பா லேற்றக் கலியரில்லாள்
கொள்ளாரே யேதுங் கொடாருலகி—னுள்ளார்தா
நல்லார்கட் பட்ட வறுமையி னின்னதே
கல்லார்கட் பட்ட திரு. (ருகூ)

சத்திநாயனர்.

அண்ணலடி யாரையிகழ்ந் தாழ்நாகி லாழாமே
தண்ணளியா னவரிந்தார் சத்தியா—ரெண்ணமுற
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு, (சூ0)

ஐயடிகள்காடவர்கோனாயனார்.

நாடதனி லேதலங்க ணண்ணிகல் வெண்பாவா
லாடலர னைத்துதித்தா ரையடிகள்—காடவர்கோன்
ருமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (சுக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

சேரர்கோ னீதித் திரவியங்கள் சுந்தரர்பாற்
சோரர் கவர்ந்தொளித்துஞ் சோர்வுண்டோ—பார்க்கி
லழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை. (சுஉ)

கணம்புல்லநாயனார்.

கணம்புல்லர் நெய்வாங்கக் காணார் கணம்புல்
லிணங்குதலை நெய்விளக்கென் றிட்டார்—வணங்கான்பாற்
றுன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. (சுங)

காரிநாயனார்.

பாரின்மூ வேந்தர் பரிசுவப்பப் பாபாடிக்
காரியா ராலயங்கள் கட்டினார்—ரோரிடமோ
யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. (சுச)

நின்றசீர்நெடுமாறநாயனார்.

பழுதறுசம் பந்தரெதிர் பாழ்சமணர் தாழ
வழுவறுநெல் வேலிவென்ற மாறர்—கழுவிட்டா
ரந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். (சுரு)

வாயிலார்நாயனார்.

ஆயறிவு தீப மகமல ரன்பமிர்தங்
கோயின்மன மாகவென்றுங் கொண்டிருந்தார்—வாயிலா
ரோர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (௬௬)

முனையடுவார்நாயனார்.

வினையடுவார் வந்தடுக்க வென்றுகொண்ட கூலி
தனையடுவார் சைவர் தமக்கே—முனையடுவார்
தாளாற்றித் தநத பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (௬எ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

தென்புகலூ ரீசரையுஞ் சென்றுபணிந் தாரூரர்
பொன்புகலாய் பெற்றார் புகழ்பெற்று—ரின்புற்று
ரொண்பொருள் காழ்ப்ப லியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. (௬அ)

கழற்சிங்கநாயனார்.

தொழச்சங்க ரன்சூடாத் தூமலர்மோந் தாள்கை
விழச்சென் றறிந்து விடுத்தார்—கழற்சிங்க
ரோர்ந்துகண் டோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. (௬௯)

இடங்கழிநாயனார்.

நடங்கழியா ரன்பருக்கே நற்பொருள்க ளெல்லா
மிடங்கழியா ரன்பினெடுத் தீந்தார்—முடங்கா
வருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியாலுண்டு. (எ0)

செருத்துணைநாயனார்.

கருத்தனணி பூவைக் கழற்சிங்கன் றேவி
யருத்தியின்மோந் தாண்மூக் கரிந்தார்—செருத்துணையார்
வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
னுண்ணவை யஞ்சு பவர்க்கு. (எக)

புகழ்சதுணைநாயனர்

வற்கடம்வந் தூண்போய்மெய் வாடிப் புகழ்த்துணைக்கை
நற்கலசம் வீழாவர னார்கொடுத்தார்—பொற்காசு
தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (எஉ)

கோட்புலிநாயனர்.

ஒலிகுழவி கோட்புலியார் கொன்றார் விரையாக்
கலிகடந்த குற்றங் கடிந்தா—ருலகில்
குடிபுறங்காத் தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். (எந)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

மாவணங்கைக் கொண்டிடுமுன் வந்தரனார் சுந்தரர்க்கோ
ராவணங்கைக் கொண்டுமறித் தாட்கொண்டார்—நோவ
வழச்சொல்லி யல்ல திடிதது வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். (எச)

பத்தராய்ப்பணிவார்.

வாய்ப்பவர னைத்தொழுது வாய்குழறிக் கண்ணருவி
தோய்ப்ப வுடனடுங்கித் தொல்பத்த—ராய்ப்பணிவா
ரன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. (எரு)

பரமனையேபாடுவார்.

பரமனையே பாடுவார் பாடும் புகழா
லிருவினையுஞ் சேரா ரிவரே—மருளா
மிருள்சே ரிருவினையுஞ் சேரா விறவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (எசு)

சித்தத்தைசசிவனபாலேவைத்தார்.

அத்தனடி யல்லா லறம்பொருளின் பங்களிலே
சித்தமலே யார்சித்தத் தைச்சிவன்பால்—வைத்தார்தாம்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (எஎ)

திருவாரூர்ப்பிறந்தார்.

மன்னுதிரு'வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தா
ருன்னு சிவகணத்தி னுற்றுயர்ந்தா—ரின்னே
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். (எஅ)

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.

கருமேனி யன்பாற் கழீஇமுப் போதுந்
திருமேனி தீண்டுவார் சீர்வாழ்—வொருவார்
பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (எகூ)

முழுநீறுபூசியமுனிவர்.

அழுகி சனைநினைந்தே யஞ்சுபதஞ் சொல்லி
முழுநீ றணிவர்நித முட்டார்—பழுதறினு
மொல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (அ0)

அபபாலுமடிசார்ந்தார்.

பாடுமுனைப்பாடியர்கோன்பாடலின்மெய்ப்பாடங்கொண்
டாடுவரப் பாலு மடிசார்ந்தா—ராடரன்பாற்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (அக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

பித்தரென்று வைதாற் பிழைபொறுத்தல் மாத்திரமோ
வைத்தாரா ரூரற் கருள்புரிந்தார்—நித்த
மழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். (அஉ)

பூசலார்நாயனார்.

வானளா வுங்கோயின் மன்னரற்குத் தன்மனமே
தானமாப் பூசலார் தாபித்தார்—ஞான
மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (அங)

மங்கையர்க்கரசியார்.

ஞானசம் பந்தரங்கே நண்ணியதா லெண்ணமில்லா
தானிவிளைத் தாரே யமணர்க்கு—மானியார்
கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (அச)

நேசநாயனார்.

ஈசருடை மெய்யடியார்க் கேதேனுஞ் செய்வலென்று
நேசருடை கோவணங்கீள் நெய்தளித்தா—ராசைபுரிந்
தன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. (அரு)

கோச்செங்கட்சோழநாயனார்.

முந்திகலாற் செங்கணார் மூண்டானைக் காவினும்பின்
றந்திபுகா வாயில் சமைத்தாரோ—யெந்தைக்
குடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று. (அசு)

சிலம்பியா னூற்கோயில் செய்தசெங்க ணார்பின்
றலங்கடொறுங் கோயில்சமைத் தாரே—நலங்கூர்
தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. (அஎ)

திருநீலகண்டயாழ்ப்பாணர்.

கானத் திருநீல கண்டயாழ்ப் பாணரைப்போல்
ஞானத் தலைவருக்கு நட்பினரார்—மானத்து
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. (அஅ)

சடையநாயனார்.

ஆம்பற்றி னற்சடைய ராலால சுந்தரனைத்
தாம்பெற்ற பேறு தவப்பேறே—யோம்பிற்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (அகூ)

இசைஞானியார்.

உற்றவிசை ஞானியா ரோங்குபுகழ் சுந்தரரைப்
பெற்றதினு மன்புமிகப் பெற்றாரே—முற்றறிவா
லீன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். (கூ0)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

கனிந்திதையங் கண்டார் கமலினியுங் காவி
லனிந்திதையுஞ் சுந்தரர்கண் டாங்கே—புனைந்துரைத்தென்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. (௬௧)

சுந்தரரைக் கண்டலர்கொய்தோகையர் சென்றொருநா
ளெந்தைகயி லைக்கவரா யின்றளவும்—வந்ததே
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று. (௬௨)

அங்கருளா லாரூர ராசையுறவேபாவை
சங்கிலியார் மானோய் தணிவித்தா—ரெங்கோன்
பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து (௬௩)

சீரூர் கயிலையினுஞ் செல்லுநாள் வில்லவனை
யாரூரர் சிந்தித் தழைத்தகன்றோ—ரோரூர்
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. (௬௪)

தள்ளாது சேரரொடு தாங்கயிலைக் காரூரர்
வெள்ளானை மேற்சென்றார் விண்ணெறு—யுள்ளமிசை
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். (௬௫)

நாவலர்வெள் ளானை நடத்தவுப மன்னியர்போ
லாவலுடன் கண்டுபணிந் தார்களோ—தேவர்
பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து. (௯௬)

பாலாழி யுண்ட பழமுனிசொன் னான்முனிவர்க்
காலால சுந்தரர்சொல் லங்கினிதாய்—மேலாம்
பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. (௯௭)

தம்முடைய தோழர்வரத் தம்முடைய தோழரையும்
வம்மினென வெண்கயிலை வாழ்வித்தா—னெம்மிறைவ
னட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை. (௯௮)

சொல்வைத்த சொல்லாறச் சொல்லக் கயிலையரன்
செல்வத் திருச்செவியிற் சேர்ந்ததே—மல்வைத்த
செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. (௯௯)

திருத்தொண்டர் வெண்பா

முற்றிற்று.

உ

சிவமயம்.

சிறப்புக்கவி.

திருக்குருகூர் ஸ்ரீமத்-ஞானசித்த சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

எண்சீர் விருத்தம்.

தவராஜ சிங்கமெனத் திகழ்ந்தசைவத் தனிப்பானு திரா
விடபா டியமா கர்த்தர், அவஞானந் தனையகற்றிக் கல்வி
ஞான மடைந்தவர்க்கு மடைதிறந்து பொழிந்த கொண்மூ,
சிவஞான யோகிகண்மா லைப்பிரபந்தஞ் சீரணிபன் னயஞ்
செறியத் தெரித்தல் செய்தான், நவரசபண் டிதரத்னம் புழ
லைவேளா ணந்திருநா வுக்கரச நாவ லோனே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம் திராவிட மாபாடிய கர்த்தர்

சிவஞானயோகிகண்மாலை.

காப்பு - வெண்பா.

சீர்வளருஞ் செல்வச் சிவஞான தேசிகன்மே
ஞர்வளர்பா மாலையொன்று நன்கியற்ற—வேர்வளர்நங்
கற்பகத்தி லேநடிக்குங் கந்தனுக்கு முன்வந்த
கற்பகமுக் கட்களிறே காப்பு.

உபாசனாமூர்த்தி வணக்கம்.

மங்களமார் திருத்தணிகை வள்ளிதெய்வ யானையுட
னெங்கள்குல தெய்வமெனு மெந்தைகும ரேசன்மா
தங்கமுகத்தோற் கிளையோன் றளிணையை யகத்திருத்திச்
சங்கையறக் கற்றுணர்ந்து தான்பாடத் துதிபுரிவாம்.

குருவணக்கம்.

பரவபரஞானமுறு பலகலைகளுதவித்தீ
விரபக்குவமளித்த விற்பனஞுஞ்சித்தாந்த
சரபமெனுமட்டாவ தானியாய்வளர்பூவைச்
சுரதருநங்கலியாண சுந்தரனற் கழறுதிப்பாம்.

நூல்.

ஆனந்தக்கூத்தருட னம்மைமயிலம்மைசெயுந்
தானந்தவத்துருவாத் தன்னிகரிலாதுதித்து
ஞானந்தழைத்தோங்க நாடுமடியார்க்கருளுந்
தீனபந்துவாந்துறைசைச் சிவஞானதேசிகனே. (க)

ஆலவமுதுண்டமர ரஞ்சலொழித்தாண்டதொரு
நீலமிடற்றோன்சமய நிலைத்திடுவான்வேண்டியநு
கூலமிலாப்புறச்சமயக் கொள்கையொழித்திடவந்த
சீலமுழுந்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (உ)

தக்கநரசிங்கமதைச் சரபமாய்நின்றொழித்த
நக்கனருள்வைபவத்தி னலம்பகரவந்தவுயர்
விக்கிரமசிங்கபுர வேளாளகுலமணியாத்
திக்கனைத்தும்புகழ்துறைசைச் சிவஞானதேசிகனே. (ங)

பொய்கண்டார்மயக்கொழிக்கும்புனிதமெனுமத்துவித
மெய்கண்டசாத்திரநூன் மேம்படச்செய்தடியவருக்
குய்வசிவபோகமதை யூட்டிமகிழ்வித்துநலஞ்
செய்யவருடென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (ச)

நச்சரவம்பூண்டாற்கு நல்லடிமையாகிமிடி
மிச்சையொழித்திடுதுறைசை விபுதர்சிலர்தமைநோக்கி
இச்சைமிகுத்தையாண்டி லிறைஞ்சிவழித்தொண்டுபுரி
செச்சைமணங்கமழ்துறைசைச் சிவஞானதேசிகனே. (ரு)

மத்துவர்சங்கரரிராமானுஜர்பா டியமறுக்கப்
புத்திதருஞ்சிவஞான போதவுண்மைதெரிந்துசிவ
பத்தர்மகிழ்திராவிடமா பாடியத்தைப்பரிந்தளித்த
சித்தர்மிகுந்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (சு)

பன்னூலினயமறிந்து பாடுமபாவலர்க்குரிய
நன்னூலின்விருத்தியுரை நாடெங்கணும்பரவச்
சொன்னேயமுடன்றிருத்தித் தூய்மைபெறவேசெய்த
தென்னுடோங்கியதுறைசைச் சிவஞானதேசிகனே. (எ)

விரைகமழ்நற்குழலுமையாள் விமலனடியார்பலரும்
நிரைபிறழாதேயுண்ணு நேர்ச்சியுறச்சமவாத
உரைமறுப்பொன்றருமையதா யுலகினுக்கிங்குபகரித்த
திரையுலகிலுயர்துறைசைச் சிவஞானதேசிகனே. (அ)

புகழுஞ்சேனுவரையர் புகலுமிளம்பூரணர்சீர்
நிகழுநச்சினர்க்கினியார் நேர்ந்தபரிமேலழகர்
மகிழுமுரைகளிற்சங்கை மாற்றிடச்சூத்திரவிருத்தி
திகழுறச்செய்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (கூ)

ஆரியநூலிற்கண்டவன்னம் பட்டீயமுடன்
சாரிதமாய்வளர்தருக்க சங்கிரகமொழிபெயர்த்துப்
பாரிலுபகாரமதாப் பரிந்தளித்தபலகலைதேர்
சீரியனுந்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே, (கய)

அருவுருவங்கடந்துநிறை யாதிவகுத்தருளியபூ
மருவுபெரும்வடமொழித் தென்மொழிக்கடலைக்கரைகண்ட
பெருமைமிகுத்திடுபுகழைப்பெற்றதொருபெற்றியினாற்
றிருவுடையதென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (கக)

சொன்னயமும்பொருணயமுந் தோன்றவுயர் நூல்களுரை
பன்னிருமாணவருடனே பாவலருமேத்தவரும்
அன்னபுகழ்த்தன்மையெலா மடைந்தநினதருமையுயர்
தென்றமிழோங்குறுந்துறைசைச் சிவஞானதேசிகனே, ()

முரதமுறுவான்சமய முரண்பாட்டையொழிக்கவந்த
அரதத்தசிவாசாரியார்சுலோகந்தன்னைச்
சரதமிதெனத்தமிழான் மொழிபெயர்த்துத்தந்ததொரு
திரமென்னோதென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (கங)

பவமதத்தருளநடுங்கிப் பணியவுயர்வழிகாட்டுஞ்
சிவதத்வவிவேகமெனத் திகழ்மூலசுலோகங்க
ணவநவமாய்மொழிபெயர்த்து நற்றமிழானல்கியதோர்
சிவமணமேகமழ்துறைசைச் சிவஞானதேசிகனே. (கச)

சிந்தனைசெய்துய்யவருட் டிருவிளையாட்டருமைமிகு
கந்தபுராணஞ்சொற்ற கச்சியப்பசிவாசார்ய
வெந்தையவதாரஞ்செ யெழிற்காஞ்சிமான்மியத்தைத்
செந்தமிழிற்றருதுறைசைச் சிவஞானதேசிகனே. (கரு)

கன்னல்சருக்கரைபாகு கற்கண்டுமுப்பழமோ
டன்னமுடன்பாறெளிதே னவைகளினுமிகுசுவைசேர்
சொன்னயமும்பொருணயமுந் துலங்கியொளிர்பாடல்களைத்
தென்றமிழாற்றருந்துறைசைச் சிவஞானதேசிகனே. (கசு)

சருவாத்மசம்புசிவா சாரியர்செய்கத்தியத்தைப்
பெருமானற்சித்தாந்தப் பிரகாசிகைப்பெயரால்
நிருமித்தமொழிபெயர்ப்பு நிலவுலகிற்பரவச்செய்
திருமருவுதென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (கஎ)

ஞாலமதிலேயுயர்ந்த ஞானதேசிகனும்பின்
வேலப்பதேசிகன்பால் வேதாகமங்கற்றுச்
சாலவுயர்தீட்சாதிசர்வமும்பெற்றேயுறைந்த
சீலமுறுந்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே, (கஅ)

மதுரமொழித்திருக்குற ளூத்தரார்த்தமுடன்மன்னுபுகழ்
விதுவெனநற்குளத்தூர்வாழ்விமலன்சோமேசற்கு
முதுமொழிவெண்பாச்சொற்ற முக்களாலிங்கரெனுந்
திதிகுறையாத்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (ககூ)

மலையமுனிமகிழ்ந்தளித்த வரமதனால்வந்துதித்து
மலைமகளோடுறுபரமன் மன்னுகுளத்தூரினைசை
கலைசைநகர்பதிற்றுப்பத் தந்தாதிகளைத்தந்த
சிலைநிகர்கல்வித்துறைசைச் சிவஞானதேசிகனே. (உ0)

குமரிசொர்ணும்பிகையம்மை குலவுபுகழ்குறும்பருடன்
சமரியற்றித்தொண்டை மான்றனோடுஞ்சமயத்திற்
சமரிலெழுபரன்முல்லை கம்பரந்தாதிகடம்மாற்
றிமிரமறச்செய்துறைசைச் சிவஞானதேசிகனே. (௨க)

செங்கழுநீர்விநாயகற்குஞ் சிறந்தவமுதாம்பிகைக்குஞ்
சங்கமதிற்றவழ்பிள்ளைத் தமிழ்நூல்கடந்தருளி
எங்களைவாழ்விக்கவந்த வெழிற்சைவசமயமெனுந்
திங்களொளிர்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (௨௨)

செப்பறைநற்பதிவளருஞ் சீரகிலாண்டேசுவரிக்
கொப்பவொருபதிகந்தந் தொளிரானந்தக்களிப்பு
இப்புவியிற்பெரியதிரு வேகம்பர்தாளிணைக்குச்
செப்பிமகிழ்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (௨௩)

பூவைமொழிப்பூண்முலையார் போகமதிலாழ்ந்தாலுஞ்
சேவைசெயற்கடனென்னுந் திருத்தொண்டர்திருநாமக்
கோவைதொகுத்தருளியநற்குணக்குன்றேசமயமெலாந்
தேவையுறுந்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே. (௨௪)

ஆதிபரமாசாரியார்நமச்சிவாயரெனுந்
தீதிலாமூர்த்திகண்மேற் சீர்பஞ்சாக்கரமாலை
யோதியெம்மனோருய்ய வுபகாரமாச்செய்த
சேதிமப்பல்வளர்துறைசைச் சிவஞானதேசிகனே. (௨௫)

தடுத்துரைத்தோர்வாயடங்கத் தனிவயிரக்குப்பாய
மெடுத்தென்னுஞ்சொற்கியற்றி யேத்துசிவபக்திவலைப்
படுத்தியுயர்ஞானமமர் பாவலர்முன்புறமதங்க
டிடுக்கிடச்செய்தென்றுறைசைச் சிவஞானதேசிகனே.(௨௬)

கம்பராமாயணத்துக்கவிக்குப்பற்பலசங்கை
வம்புவைணவரடங்க வரைந்திடவேயவர்வேண்டச்
சம்பந்தங்காட்டியுத்தரந்தந்த குணக்கடலாஞ்
செம்பியநாடுறுந்துறைசைச் சிவஞானதேசிகனே. (௨௭)

சீனிகற்கண்டோவெனுநற்சிவஞானசித்திக்கு
ஞானப்ரகாசருரை நலமிலாப்போலியுரை
யானதெனமறுத்திட்ட வந்தமிகுஞ்செய்யதமிழ்த்
தேனளிசிந்திடுந்துறைசைச் சிவஞானதேசிகனே. (௨௮)

நிலவுலகிலெம்மனோர் நிலைநின்றுவாதிக்கப்
பலவுரைகள்கண்டனங்கள் பலநூல்களைத்தந்து
புலமைமிகமென்மேலும் புகழ்பெறுநற்சிவசமயத்
திலகமெனவொளிர்துறைசைச் சிவஞானதேசிகனே. (௨௯)

அறிவேநல்லானந்த வருட்குருவேயடியார்கள்
உறவேயென்னுருயிரே யுறுதுணையேபுறச்சமயர்
பிறிவேபுண்ணியவடிவே பேரமுதேஞானியர்கள்
செறிவேதாங்கியதுறைசைச் சிவஞானதேசிகனே. (௩௰)

வாழி.

வாழிசங்கரமூர்த்தி வாழிசாம்பவியம்மை
வாழியைங்கரநாதன் வாழிசண்முகக்கடவுள்
வாழிதெய்வயானைவள்ளி வாழியுயர்சிவசமயம
வாழிதிருநீறுமணி வாழியடியார்சரணே.

சிவஞானயோகிகண்மாலை
முற்றிற்று.

இது
பண்டிதரத்தினம்
புழலை - திருநாவுக்கரசுமுதலியாரால்
இயற்றப்பட்டது.